193

# கிறிஸ்தவ கீர்த்தனை அனுபந்தம்

## SUPPLEMENT TO 'CHRISTIAN LYRICS'

1950
MADRAS
0K6:417
N50
77306

# கிறிஸ்தவ கீர்த்தனை அனுபந்தம்

## SUPPLEMENT 'TO CHRISTIAN LYRICS'

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 OCT 1950
MADRAS

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)
MADRAS BANGALORE MYSORE COLOMBO
1950

E.B.

*COPYRIGHT*

*First Edition*, 1950

Q6:417
N50

77306

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, VEPERY, MADRAS
FOR THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA—1950. B1612

# முகவுரை

இந்த அனுபந்த வெளியீட்டில், 'கிறிஸ்தவ கீர்த்தனைகள், 1950 வருஷத்துத் திருத்திய பதிப்பில், விடப்பட்ட சில கீர்த்தனைகளும் 'திருமறையூர் கீதங்கள்' என்னும் நூலிலிருந்து எழு முக்கியமான கீர்த்தனைகளும், சாண்ட்லர் பதிப்பிலிருந்து சில கீர்த்தனைகளும், யாழ்ப்பாணம் கீர்த்தனை நூலிலிருந்து நாலு கீர்த்தனைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தக் கீர்த்தனைகளையும் உபயோகிக்க அநேக சபையார் விரும்பினபடியால், அவற்றைத் தொகுத்து, விரும்புவோர் அவசியத்தைத் தீர்ப்பதற்காகத் தனி அனுபந்தமாக இது வெளியிடப்பட்டது.

சாண்ட்லர் கீர்த்தனைகளுக்கு (நெ. C.) என்றும் திருமறையூர் கீதங்களுக்கு (நெ. T.) என்றும் யாழ்ப்பாண கீர்த்தனைகளுக்கு (நெ. J.) என்றும் அச்சிடப்பட்டுள்ளது.

# கிறிஸ்தவ கீர்த்தனை
# அனுபந்தம்

## 1. (14) ஈசனை ஆவியில் ஆராதிக்கவேணுமே

பைரவி                                                                 சாபுதாளம்

பல்லவி

ஆவியாம் ஈசனை ஆவியில் உண்மையாய்
ஆராதிக்க வேணுமே!

அனுபல்லவி

ஜீவருக் கெல்லாம் அதிதமாக நின்ற
சித்விலாசன் சருவகாரணன் அந்த— ஆவி

சரணங்கள்

1 எங்குமு றைபவன், எவ்வுயிர்க் குமீசன்,
இதயக் கண்ணால்மட்டும் காணத்த கும்விகாசன்,
இங்குமங் குமென்ன வில்லாமல் எவருக்கும்
எந்தவி டத்திலும் இறைவனு கவமர்ந்த— ஆவி

2 சத்து சித்தானந்த மான தனிமுதல்,
சார்ந்தடி பணிவர்க் கழியாத மெய்ப்பொருள்,
உத்தம பத்தியாய் உள்ளங் கள்ளமின்றி
ஓங்கிய அன்பினுல் தொழவேண்டுமே, அந்த— ஆவி

ல. ஈ. ஸ்.

## 2. (28) சுதன் பிறந்தார்

சகாணு                                                                 ஆதிதாளம்

பல்லவி

சுதன் பிறந்தார், சுதன் பிறந்தார்.

அனுபல்லவி

துதிமிகு தேவ சுதன் பிறந்தார்.

சரணங்கள்

1 சருவ தயாப சகாய பிர தாப
கிருபைப் பிதாவின் தற்சுபாவ,—தேவா,— சுத

2 பரமாபிஷேக பட்ச சினேகப்
பெருமான் மகத்வத் திரியேகத்,—தேவா,— சுத

3 மனுடரை மீட்க, மறுபிறப்பாக்கக்
கனிவினை யாவையும் தீர்க்கத்—தேவா,— சுத

4 இந்நிலத்தை நாடி, முன்னணையைத் தேடிக்
கன்னியா ஸ்திரியிடம் நீடித்,—தேவா,— சுத

5 பெத்தலேகம் ஊரில் மெய்த்தவிதின் வேரில்
பத்தர்களுக்காக இப்பாரில்,—தேவா,— சுத

வே. சா.

## 3. (45C) பரம சேனை கொண்டாடினர்

ஆனந்தபைரவி — ஆதிதாளம்

பல்லவி

பரம சேனை கொண்டாடினர்; பரன் இரக்கத்தைப் பாடினர்.

சரணங்கள்

1 பரத்திலே இருந்து பதி பெத்தலேம் வந்து,
பரன் நரரூபணிந்து பணிவானதில் சிறந்து,— பரம

2 இரவின் இருளை மாற்றி, இடையர் மனதைத் தேற்றி,
கிருபைப் பரனைப் போற்றி, கிறிஸ்தின் பிறப்பைச் சாற்றி,—பரம

3 சர்ப்பப்பேயை வென்று, சகலர்க் கேய நன்று
அற்புதமாக இன்று அத்தன் பிறந்தார் என்று,— பரம

தை. ரை.

## 4. (46) சாலேமா நகர்

சாமா — சாபுதாளம்

1 சாலே மாநகர் கீழ் வீதிவந்ததும்,
தோன்றும் ஒலிவடி வாரம்,—போக
வேண்டும் அரைமைல் தூரம்,—நடு
ராவினில்பதி ஞேரொருவரோடு
ஏகினர் கெத்சே மேனே நோக்கியே,
நன்றென வெட்டுப் பேரைப் பிரித்தங்கே
வைத்தாரே தோட்டத்தின் ஓரம்,—மூவ
ரைத்துணை கொண்டாரந் நேரம்.

2 கல்லெறி தூரம் சென்று முழங்காலில்
நின்று ஊக்க ஜெபம் செய்ய,—துயர்
கொண்டு ரத்த வேர்வை பெய்ய,—பெரும்
சத்தத்தோடு கண் ணீரும் பொங்கவே,

சக்தி முற்றிலும் அற்றுப்போகவே,
சாடினர் முகம் குப்புறத்தாளிலே
சாற்றவும் கூடுமோ நாதன்?—வந்து
தேற்றினன் அங்கொரு தூதன்.

3 சொல்லாலே உல கங்கள் படைத்தவன்
சோர்கின்ற வாதையைப் பாரும்!—திகில்
துக்கம் வியாகுலச் சீரும்!—அன்று
பேய்க்கணங்களும் ஓடிடக் கடல்
கோஷ்டமுற்றிலு மாறிடப், புகழ்
பெற்றவன் கொடும் வாதைக்குள்ளாவதின்
காரணமென்ன சொல் வீரே!—அவர்
பேரில் விஸ்வாசம் வைப் பீரே.

4 அப்பா, என்னரு மைப்பிதாவே! உன்றன்
சித்தமே என் முழுப் பாக்யம்;—அதே
நித்தமும் என் தியான வாக்யம்;—திரள்
அந்தகாரமும் மாந்தர் பாவமும்
நிந்தையாகவே வந்துமோதினும்
கொஞ்சமும் மனம் மாறுவேனே? இங்கே
வந்ததினல் என்ன லாபம்?—நார்
எந்தவிதம் தீர்ப்பார் பாவம்?

சா. ப.

## 5. (55) கோலைக்காவனம் போறுர்

**கேதாரகௌளம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

கொலைக்காவனம் போறுர், அன்னமே,—நரர்
கொடிய பாவத்தால், இதோ முன்னமே.

**அநுபல்லவி**

வலமைச் சதாநித்திய,
தலைமைத் தேவாதிபத்திய,
வஸ்தனுதி திருச்சேயன்,
உத்தம கிறிஸ்துநாயன்,
மனுடர்களுட பிணையாளி மத்யஸ்தன்,
எனுட் பிரிய மணவாள சிரேஷ்டன்,
வங்கண விங்கித லங்கிர்த நேசன்,
சங்கமுழங்கிய சங்கையின் ராசன்
மருகிய துயரொடு குருசினில் மடியத்
திருவுளமாய் நமதேசுவுங் கொடிய— கொலை

**சரணங்கள்**

பொந்தியுப் பிலாத்துவின் கீழாக - நின்று
புண்ணியனுர் பாடுபட்டுச் சாக,
பூரியர் ஆரியர் வீரிய மாயடர்
காரிர வேசெய் கொடூரம லாதினம்— கொலை

புடவிக்கிருளே விடியற் பொழுதே
படிறுக்கொடியோர் இடு கட்டுடனே யிரண
போரினு ரவாரமாக மனுடகு
மாரன் மீத கோரமாக முறையிடப்,— கொலை

சிந்தை நடுங்கச்செய்யும் லோக ஞாயத்
தீர்ப்பின் உபாயமெல்லாம் போக,
புந்திக்கடாத மாயம்,
போடிச் சம்பிரதாயம்,
பொய்மை மனதான நேயம்,
பொற்புப்பேச்சாலென்னுதாயம்,
போதகராகிய காதகர் கூறவும்
பூதர்களாம் வலுபாதகர் சீறவும்,— கொலை

பூண்ட சொற்படி யாண்ட கர்த்தனை
நீண்ட கற்கிடை மீண்டிறுக்கியே,
பொங்கி மகாவுதி ரங்கள் குபீரென
உங்கசை வாரடி யின்கன வாதைகள்
பொன்னுரு மாறியும் வின்னம தாயிரு
கன்னமெலாம்வலி துன்னவும் நாணுெடு
புயங்கள் நொந்திட வொன்றி
அழுந்த வரிந்து பிணைந்துயர்,
போற்றிரு மத்தக முட்கிரீடத்தை
அழுத்தியடித்து முகத்திடை துப்பினர்,
புகைத்து வசை யெண்ணுது பேசினர்,
அகைத்து மனம் நண்ணுமலேசினர்,
பகைத்து நரர் பண்ணுத தீமைகள்
புடைத்தோர் கோலது கொடுத்து, வீணர்கள்
போத நகைத்துச் சிரித்துத்
தீதுற மெத்தப் பழித்து,
பொன்ருத, குன்ருத, நன்ருன ஒன்ருன,
என்தேவ னின்பால் முழங்கா விடும்போடு
புதினத்துடனிடவும் விதனப்பட யிறையை
வதனத்தி லறையவும் அதினக் கொடுமைசெய்ய,
பொறை யுடனின்று குருசதுகொண்டு,

யெருசலே யின்கண்ணுருவ நடந்து,
போற்றி மாதர னேக மாயழ
ஆற்றி நேசசி நேக மாகவும்,
பூங்கனியொன் றின்பங்கம்
நீங்கவும் நன்றின் துங்கம்
புகழாகவும் மானிடர் வாழவும்,
மிக வேதயவாகி யென்ற யகர்
புல்லரொடு குருசின் வாதிலறைந்திடக்
கொல்கதா மலேயின் மீதிலிறந்திடக்— கொலே

வே. சா.

## 6. (65) கல்வாரி மலேதனில் கண்டேன்

தேவகாந்தாரி ரூபகதாளம்

தேவாரம்

1 அன்பர்க்கருள் புரிவோனே, ஆதியாய் நின்ற சீமானே,
துன்பமகற்றிடுங் கோனே, தூயமனமுளத்தானே,
பொன் பொலியும் பெருமானே, பூரண நேசமுற்றானே,
இன்பமளித்திடுந்தேனே, இலங்குந்திருமேனி கண்டேன்;
கண்டேன் அவர் திருத்தேகம்; கல்வாரி மலேதனில்
கண்டேன்.

2 சத்தியவாசகப்போதன், சாற்று முரைப்பிடிவாதன்,
பத்திசேர் சற்பிரசாதன், பாவமகற்றும் பொற்பாதன்,
எத்திசையோர் தேடும் நாதன், இந்நிலம் வந்தமா நீதன்,
முத்தியளித்திடு வேதன், மூவா திருமேனி கண்டேன்;
கண்டேன் அவர் திருத்தேகம்; கல்வாரி மலேதனில்
கண்டேன்.

3 பாவமகற்று பகாரன், பசாசுகளுக்கபகாரன்,
ஜீவனளிக்கும் உதாரன், தீவினேபோக்குங் குமாரன்,
சாவையழித்தமாவீரன், தாரணியோர்க்குபகாரன்,
தேவ சுரரேத்துந்தீரன், சோதி திருமேனி கண்டேன்;
கண்டேன் அவர் திருத்தேகம்; கல்வாரி மலேதனில்
கண்டேன்.

4 ஆதியும் அந்தமுமான, அல்பா ஒமேகாவுமான,
நீதி இரக்கமுமான, நித்திய ஜீவனுமான,
ஓதிய வேதமுமான, உத்தம மார்க்கமுமான,
மேதினியிலுருவான மீட்பர் திருமேனி கண்டேன்;
கண்டேன் அவர் திருத்தேகம்; கல்வாரி மலேதனில்
கண்டேன்.

சா. ப.

## 7. (*104*) தோத்திரிக்கிறேன்

**சக்ரவாகம்** **திஸ்ர ஏகதாளம்**

பல்லவி

தோத்திரிக்கிறேன் நான் தோத்திரிக்கிறேன்;—தேவ
சுந்தரக் கிறிஸ்துவேந்தைத் தோத்திரிக்கிறேன்.

**சரணங்கள்**

1 க்ஷேத்திரத்தொரே யோவாவைத் தோத்திரிக்கிறேன்;—கன
திவ்விய திரித்துவத்தைத் தோத்திரிக்கிறேன்;
பாத்திரமாக்கிக் கொண்டோனைத் தோத்திரிக்கிறேன்;—உயர்
பரமண்ட லாதிபனைத் தோத்திரிக்கிறேன்;
நேத்திரக் க்ருபாநதியைத் தோத்திரிக்கிறேன்;—சதா
நித்திய மகத்துவத்தைத் தோத்திரிக்கிறேன்;
கோத்திரத் திலராவேலைத் தோத்திரிக்கிறேன்;—யூதர்
கொற்றவனைப் பெற்றவனைத் தோத்திரிக்கிறேன்.— தோத்

2 அண்டர்களி ஞயகனைத் தோத்திரிக்கிறேன்;—அதற்கு
அப்புறத்தை அப்புறத்தைத் தோத்திரிக்கிறேன்;
மண்டலமெலாமறியத் தோத்திரிக்கிறேன்;—முழு
வானவரும் பார்த்து நிற்கத் தோத்திரிக்கிறேன்;
தெண்டனிட்டுத் தெண்டனிட்டுத் தோத்திரிக்கிறேன்;—
மனச் சிந்தையினுல், விந்தையினுல் தோத்திரிக்கிறேன்;
தொண்டனடி யேனென்று தோத்திரிக்கிறேன்;—என்றன்
துன்பமெல்லாந் திருமென்று தோத்திரிக்கிறேன்.— தோத்

வே. சா.

## 8. (*114*) வாரும் தேற்றரவரே

**உசேனி** **ஆதிதாளம்**

பல்லவி

வாரும், தேற்றரவரே, வாரும்;—எனைச்
சேரும், வினையறுத் தெனைச் சேரும்.

**அனுபல்லவி**

ஆரும் மாற்றுதற் கரிதான பவம் திரும்படி செய்யும், திறவானே.—
வாரும்

**சரணங்கள்**

1 மிகவும் பாழ் நிலம் என்னுள்ளமே;—அதில்
விதைக்கும் திரு வசனத்தையும் தள்ளவே,
ஜகமும் மாமிச ஆசைகளும் மெள்ளவே,—செய்யும்

சதியை அகற்றி எனையாட் கொள்ளவே,
அக மீதா நந்தம் கொண்டுன் புகழ் விள்ளவே,—செஞ்சொல்
அடியன் நான் உமைப் பாடி மகிழ் கொள்ளவே,— வாரும்

2 வாடும் மனதினை ஆற்றுதற்கும்,—வேத
மார்க்கத் தொழுகி உமைப் போற்றுதற்கும்,
சூடென் கெட்ட குணத்தை மாற்றுதற்கும்,—சற்று
துலங்கும் தீபத்திற் கெண்ணெய் ஊற்றுதற்கும்,
நாடும் கதியில் கரை ஏற்றுதற்கும்,—நித்ய
நன்மைகளினுல் எனைத் தேற்றுதற்கும்,— வாரும்

தே. மு.

## 9. (183) கடைக் கணியே

சுருட்டி ரூபகதாளம்

### தேவாரம்

1 பரனே பரம் பரனேபரப் பொருளே, பரஞ்சோதி,
உரனுடிய விசுவாசிகட் குவந்தாதரம் புரியும்!
பெருமான் அடி யேனேபெரும் பாவிபிழை பட்டேன்;
சரணுடிவந் தடைந்தேன் ஒரு தமியேன்கடைக் கணியே!
2 தூலத்தையு வந்துண்டுசு கித்துச்சுகம் பேணிக்
காலத்தையுங் கழித்தேன் உயர் கதிகூட்டும் ரக்ஷணிய
மூலத்தனி முதலே, கடை மூச்சோயுமுன் மூடிச்
சீலத்திரு முகத்தாரொளி திகழக்கடைக் கணியே!
3 கோதார்குணக் கேடன், மிகக் கொடியன், கொடும்பாவி,
ஏதாகினு நன்றென்றில னெனினும் புறக்கணியா—து
ஆதாரசர் வேசாவன வரதாவரு ளுதா,
பாதாரவிந் தஞ்சேர்த்தெனைப் பரிவாய்க்கடைக் கணியே!
4 போராதர முடையாய்ப்பெரி யோனே, பெரு மானே,
பாராதரித் துயிரீந்திர க்ஷணையீட்டிய பரனே!
ஓராதர முனையன்றிலை, உயிர்போம்பொழு துடன்வந்—து
ஆராதரம் புரிவார் எனக் கையா? கடைக் கணியே!
5 அன்பார்கலி அருண்மாமழை அடியார்க்க னவரதம்
இன்பார்தரு கிருபாநிதி, இரக்ஷண்ய புண்ணியக்குன்
றுன்பாற்சர ணடைந்தேன் எனை யொறுக்காய் அகத்தொளி
தந்—து
என்பாற்பிழை பொறுத்தாதரித் தெந்தாய், கடைக் கணியே!
6 கிருபாகர கருணுகர கிளர்புண்ணியப் பொருப்பே,
பெருமாவடி யேன்செய்பிழை பொறுத் தென்னுயிர் பிரிகால்
மருவார்தரு குருசில் திகழ் வதனும் புஜமும்முன்
திருநாமமந் திரமும்மகந் திகழக் கடைக் கணியே!

ஹெ. ஆ. கி.

## 10. (221C) ஏசுநாதனே, இரங்கும்

உசேனி ரூபகதாளம்

பல்லவி

ஏசுநாதனே—இரங்கும் என்—ஏசுநாதனே

அனுபல்லவி

ஆசைக்கிறிஸ் தென தன்புள்ள நேசனே, அருளே, தெருளே, பொருளே,
ஆவல் ஆகினேன்—மகா பிரலாபம் மூழ்கினேன்;
ஐயா, நேயா, தூயா, ரட்சியும்;
ஆபத்தினுல் பரிதபித்து நிற்கிறேன்.— ஏசு

சரணங்கள்

1 அருமை ரட்சகனே; உனை அல்லாமல் ஆதரவார் ஐயா?
ஆத்தும நாயகன் நீ எனக்கல்லவோ? அன்புகூர், மெய்யா,
தருணம், தருணம், கைவிடாதேயும்; தலைவா, வலவா, நலவா,
தாமதியாதே;—கிருபை செயும், ஸ்வாமி—இப்போதே,
தாதா, நாதா, நீ தா, நீ கா,
தருமப் பிரகாசனே, பரம சருவேசனே.— ஏசு

2 ஐந்து காயத்தின் கிருபைக் கோட்டையில் அடைக்கலந்தாவே,
ஆதாமின் பாவத்தால் மானிடன் ஆன மெய் வாழ்வே,
விந்தைக் கிருபை அளிக்க வேண்டும், விமலா, நிமலா, அமலா,
வேறு பண்ணுதே,—மிகும் சீறு—மாறு நண்ணுதே;
மேலா, கோலா, நூலா, நீயே
விரும்பிச் சேரும், கோவே; திரும்பிப் பாரும், தேவே.— ஏசு

வே. சா.

## 11. (283C) எங்கள் விண்ணப்பம் கேள் ஐயா

சுருட்டி சாபுதாளம்

பல்லவி

எங்கள் விண்ணப்பம் கேள் ஐயா, ஏசுநாதையா,
எங்கள் விண்ணப்பம் கேள் ஐயா.

அனுபல்லவி

உன்றன் திரு ரத்தத்தால் உகந்து நீர் கொண்ட சபை
வந்துன் பதம் பணிந்து வந்தித்துச் செய்தவங்கள்.— எங்கள்

சரணங்கள்

1 இருள் சூழ் தொல் புவி மீது, ஏகனே,—இலங்கிடவுன்
ஒரு சொல்லால் ஒளிவீசச் செய்ததையே;
இருளும் அருளு நிறை எல்லா மனுடர் நெஞ்சம்
அருள் ஒளிவீசி இன்று அத்தன் பதம் பணிய.— எங்கள்

2 மந்தையாடு சிதறிப் போனதை—மறுகி, உயிர்
தந்து ரட்சித்த கோனே, தாங்கையா;
சிந்தை தவறி வழி சிதறித் திரியும் பேர்கள்
சிந்தை திரும்பிச் சீவ பாதையில் சென்றுழுக,— எங்கள்

3 நேசம் வைத்தாளும் நீரே மந்தையை—நெகிழ்ந்திடாமல்;
மோசம் வராது தின முற்றுமே
தாசர் பணிவிடைகள் தவறாது வாய்க்கும்படி,
யேசுவே, நின்னடியார்க்கியும் தேவாசீர்வாதம்.— எங்கள்

ச. ஐ. யே.

## 12. (199C) பின்செல்வேன் என் மீட்பரே

பைரவி — சாபுதாளம்

பல்லவி

பின்செல்வேன், என் மீட்பரே;—நான் உன்னைப்
பின்செல்வேன், என் மீட்பரே

அனுபல்லவி

நான் செய்த பாவங்கள் நின் தயவால் தீர,
நாதா, ஜீவன் விட்டாய் வன் குருசிலதால்,

சரணங்கள்

1 என் சிலுவை எடுத்தேன்,—எல்லாம் விட்டு
என்றும் நின்னையே அடுத்தேன்;
நின் திருப் பாதத் தடங்களை நோக்கி நான்
நித்தமும் வாழ்வேன் உன் சித்தம் என்றும் செய்து,— பின்

2 சிங்கம் போலே கெர்ச்சித்தே—என்றன் நெரே
சீறி மிக வெதிர்த்தே;
கங்குல் பகலும் தீ அம்பு என்மேல் எய்யும்
கடியின் மேல் ஜெயம் பெற்று, அடியேன் நின்னருள் பெற்று,
—பின்

3 நெருக்கம் செய்தால் மனுஷர்—அதென்னையுன்
நெஞ்சண்டை ஓட்டுவதால்;
பாரிடத்தில் பல சோதனை வதைத்தாலும்,
பார்த்திபனே, உன்னை ஒருபோதுமே விடேன்,— பின்

4 காசினி யோர்கள் என்னைப்—பகைத்தாலும்
காதலன் ஏசு உன்னைப்
பாசமதாகவே பணிந்து தொழுவேனே;
பாக்கிய நகரில் பின் உன்னோடு வாழ்வேனே.— பின்

பி. ஜோ. சி.

## 13. (*194*) ஏசையா, பிளவுண்ட மலையே

சங்கராபரணம் ஏகதாளம்

பல்லவி

ஏசையா, பிளவுண்ட மலையே,
மோசநாளில் உன்னில் மறைவேனே.

சரணங்கள்

1 மோசமுள்ள பாவ நோய் முழுதும் என்னில் தீர், ஐயா;
தோஷம் நீக்கும் இரு மருந்தாமே—சொரிந்த உதிரம் நீருமே.—
ஏசையா

2 இகத்தில் என்னென் செய்தாலும் ஏற்காதே உன் நீதிக்கு,
மிகவாய் நொந்தழுதும் தீராதே—மீளாப் பாவ ரோகமே;—
ஏசையா

3 பேரறம் அருந்தவம் பெருமிதமாய்ச் செய்திடினும்,
நேரஸ்தரின்பாவம் நீங்குமோ?—நீங்காதே உன்னுலல்லால்;—
ஏசையா

4 வெறுங் கையோடோடி வந்து, வினை நாசன் பேரருள் கெஞ்சித்
திருச்சிலுவை தஞ்சம் புகுந்து,—தியங்கி அணைத்தே நிற்பேன்;—
ஏசையா

5 அருளில்லாதோன் ஆனுலும், அபயமுன்றன் நீதிக்கே!
கருணை ஊற்றில் கழுவமாட்டாயோ?–கழுவாயாகில் சாவேனே;—
ஏசையா

6 ஜீவனேடே தங்கிலும், தெளிகண் சாவில் மங்கிலும்,
தேவாசனமுன் அஞ்சி நிற்கத்—தேவலோக மேறிலும்,— ஏசையா

ர. சா. சா.

## 14. (*271*C) சேவித்துக்கோண்டேன், ஐயா

மோகனம் சாபுதாளம்

பல்லவி

சேவித்துக் கொண்டேன், ஐயா;—சீர்பாதத்தைத்
தெரிசித்துக் கண்டேன், ஐயா.

சரணங்கள்

1 ஆவிக்குரிய மணவாளன் ஏசுகிறிஸ்து
ஜீவப்பிரான் ஒரு தேவகுமாரனை நான்— சேவி

2 சந்த க்ருபை சிறந்த சத்ய பிதாவின் ஒரு
மைந்த கிறிஸ்துவே, நின் மகத்வ ப்ரசன்னத்தைச்— சேவி

வே. சா.

## 15. (268) அடியேன் இருக்கிறேன்

கேதாரகௌளம் ஆதிதாளம்

பல்லவி

இதோ! அடியேனிருக்கிறேன்,—என்னை
அனுப்பும்,
ஏசுவே, இப்போதே போகிறேன்.

அனுபல்லவி

இதோ! போகிறேன் நாதனே, இப்புவியில் நீர் எனக்கே
எந்த இடம் காண்பித்தாலும் உந்தன் சித்தம் செய்திடுவேன்;—

சரணங்கள்

1 மலைகள், பள்ளங்கள் தாண்டியோ,—மா கஷ்டமான
வனங்கள், கடல்கள் கடந்தோ,
தொலை தூரமாகச் சென்றோ, சுவிசேஷம் கூறும்படிச்
சொல்லும்போது நீர் ஏசுவே, துரிதமாய்ச் சென்றிடுவேன்;—
இதோ

2 வறியர் அறிவீனருக்கும்,—மா துஷ்டருக்கும்,
வணங்காக் கழுத்துள்ளோருக்கும்,
அறிவி என் நாமம் என்று அடியேனை ஏவும்போது
சரியென்றிணங்கி எல்லா சனத்தையும் தேடிப் போவேன்;—
இதோ

3 வயல் நிலங்கள் இப்பொழுதே—அறுப்புக்கேற்க
வளமாய் விளைந்திருக்குதே;
நயமான வேலையாட்கள் ஞாலமதில் தேடுகின்றீர்;
பயமின்றி என்னை உந்தன் பாதமதில் ஒப்புவித்தேன்.—இதோ

4 உலக முடிவு மட்டுமே—சகல நாளும்
உங்களோடிருப்பேன் என்றீரே;
மலைமேலே நீர் கொடுத்த மாபெரிய கட்டளையைத்
தலைமேலே கொண்டிப்போது தரணியில் ஏகிடுவேன்.—இதோ

வே. ச.

## 16. (318) கன்னிமரியாள் கீதம்

பியாகடை சாபுதாளம்

பல்லவி

என்னபாக்கியம் அம்மா!—ஏகனருள்
ஏழைக்குக் கிடைத்த தம்மா!

அனுபல்லவி

உன்னியே தவம்புரிந் தோர் அனேகரிருக்கக்
கன்னியெனை நினைத்த கருணையை என்ன சொல்ல?— என்ன

சரணங்கள்

1 என்னுத்துமாவே! நீ—இறைவனை
என்னாளுமே துதிப்பாய்!
என்னாவியே! தேவரட்சகனை யறிந்து
என்றும் வணங்கிமகா நன்றியோடு களிப்பாய்!— என்ன

2 பாக்கியவதியானேன்,—இப்பூவின்கண்
யார்க்கு மதிப்பானேன்;
வாக்கிலே வல்லபரன் மகிமை எனக்குச் செய்தார்;
நோக்கிலவ ரரிய நாமம் பரிசுத்தமே.— என்ன

3 ஆண்டவர் இரக்கம்—அடியார்க்கே
ஆண்டாண்டாக நிலைக்கும்;
மீண்டுமவர் புயத்தால் மெத்தப் பராக்கிரமஞ்செய்தார்;
மேட்டிமையுள்ளவரை மேதினியில் அழித்தார்.— என்ன

4 பலவான்களானோரை—ஆசனம் விட்டுப்
பாதாளத்தில் தள்ளினார்;
தலமதில் தாழ்ந்தோரைத் தம்மாசனமுயர்த்தித்,
தாகம் பசியுள்ளோர்க்குச் சகல நன்மை யளித்தார்.— என்ன

5 நேசன் ஆபிரகாமை—பின் சந்ததியை
நினைத்திரக்கஞ் செய்தோனாய்,
தாசன் இஸ்ரவேலைத் தாங்கியே யாதரித்த
தற்பரன் கிருபையை நித்தமுமறவேனே.— என்ன

சா. ப.

## 17. (*328*) விடியல் நேரத்தின் வெள்ளி முளைத்தது

பூபாளம் சாபுதாளம்

1 விடியல் நேரத்தின் வெள்ளி முளைக்குது,
விட்டுச் சேவலும் விழித்துக் கூவுது,
வடிவில் மிகுந்ததோர் பறவை பாடுது,
வணங்க மனமே, நீ எழுந்திராய்!

2 காகங் கூவுது, காலை யாகுது,
காணுங் குணதிசை வெளுத்துக் காணுது,
ஆக மனதினில் அடியார் துதிக்கிறார்,
அதிக சீக்கிரம் எழுந்திராய்!

3 மூத்த மூத்தர்கள் துதிகளெழும்புது,
முனிவர் துதிகளின் மூட்டமெழும்புது,
காத்த கர்த்தரின் காருமெழும்புது,
கடுகி மனமே, நீ எழுந்திராய்!

4 அந்தகாரமும் அகன்றுபோகுது,
அழகுத் தாமரை அரும்பு மலருது,
இந்த நேரத்தில் இணங்கித் துதித்திட,
இரக்கங் கிடைத்திடும், எழுந்திராய்!

5 மயில்கள் தோகையை விரிய நெளிக்குது,
மகத்வ மிருகங்கள் ஓடி யொளிக்குது,
குயில்க ளோசையைக் காட்டத் துவக்குது,
குருவை வணங்க நீ எழுந்திராய்!

6 யேசு நாமமே இன்ப ரசமென
யேற்றி துதிசெய்யும் அடியர்க் கருள்புரி!
யேசு நாமத்தை யெண்ணித் தாசனின்
ஏழை மனமே, நீ எழுந்திராய்!

யோ. ஈ.

## 18. (*379*) கர்த்தரைப் போற்றிப் புகழுங்கள்

தோடி (Benedicite) ரூபகதாளம்

### பல்லவி

கர்த்தரைப் போற்றிப் புகழுங்கள், கருத்துடன் பரமனை
நித்தமே புகழ்ந்து துதியுங்கள்.

### அனுபல்லவி

சித்தியா யிகத்தை வகுத்து,—சக்தியால் மனுவைப் படைத்து
முத்தியிலவனைச்சேர்க்க, இத்தரை மகவையனுப்பிய.

### சரணங்கள்

1 ஏகன் செய் சகல சிருஷ்டியே—நீர் எழுந்து பாடும்,
தேக மில்லாத தூதரே;
மேகவானங்கள் சேரும்—மீதுள்ள தண்ணீர் வாரும்
வேகவான் வலிமை நீரும்—விமலனைப்புகழ்ந்து பாடும்.— கர்த்

2 சூரிய சந்திர சோதியே,—சோபித்து மின்னும்
ஆரியவுடுக்கள் கோடியே,
மாரியே பனியே காற்றே,—மகத்துவ நெருப்பே கொதிப்பே,
சீரான மழையின் காலம்—சேருங் கோடைகாலம் நீரும்,—
கர்த்

3 மூடிடும் பனியாலாங்கட்டி—முழங்கிப்பாடும்,
ஆடிடுங்குளிரே பனிக்கட்டிக்
காடெலா முறைந்த நீரே—கல் மழையான நீரே,
தேடிடும் இரவே பகலே,—தினம் வருமொளியே இருளே— கர்த்

4 மின்னலே மேக சேனேயே,—மாபூமி நீயே
சின்னதே சிகர மலேகளே,
நன்னய தாவரங்கள்—நாடிடுமூற்றின் கண்கள்,
எண்ணிடாக்கடலே, நதிகள்—ஏகமாயெழுந்து தொழுங்கள்.—
கர்த்

5 மச்சமே நீந்தும் செந்துவே—மாபரனைப்போற்றும்
உச்சமெ மும்பறவையே,
பட்சிக்கும் காட்டு மிருகம்,—பயமிலா நாட்டு மிருகம்
மிச்சமாய்ப்போற்றவாரும்,—மிக மிகப்புகழ்ந்து பாடும்,— கர்த்

6 மனுக்களே மனுக்கள் சாதியே,—ஏகோவா தனேயே
வணங்கிடு மிஸ்ரவேலரே,
தினமவரூழ்யஞ் செய்வோர்,—திகழ் பரதீசிலுய்வோர்,
மனமதில் தாழ்மையுள்ளோர்,—மிகவெழு நெருப்பை வெல்வோர்.
கர்த்

சி. தே. ஞா.

## 19. (37J) அருள் நாதனே போற்றி

ஆரபி ஆதிதாளம்

அகவல்

வானமும் புவியும் வழங்கு பல்லுயிர்களும்
ஞானமாய் அமைத்தருள் நாதனே போற்றி!
மானிட உயிர்க்கு நின் மகத்வ நற் சாயலேத்
தான் அளித்தருள் செய்யுந் தற்பரா பொற்றி!
சீவன் சுகம் பெலம் சிறந்த ஞானம் பொருள்
மேவடியார்க்கருள் விண்ணவா போற்றி!
துன்பந்துயரம் சோர்வினில் அடியரை
அன்பொடாதரித்திடும் அண்ணலே போற்றி!
அற்புதமாய் எமக்கடைக்கலம் புரிந்து
தற்காத்திரட்சை செய் தயா நிதி போற்றி!
பாவியை மீட்டு நற் பரகதி சேர்க்க மெய்ச்
சீவனுய் உதித்திடும் தெய்வமே போற்றி!

உய்ந்நெறி கொடுத்தெமக் குயர்ந்த நம்பிக்கை
துய்ய சீவியம் அருள் சோதியே போற்றி!
கர்த்தனே, கருணைக் கடவுளே போற்றி!
அத்தனே நின்னிணை யடி போற்றி, போற்றி!

ஆ. அ.

## 20. (48T) சரண் புகுவேன்

### 91-ம் சங்கீதம்

ஸ்ரீராகம் ஆதிதாளம்

பல்லவி

உன்னதமானவர் சன்னிதி மறைவில்
வந்தடைக்கலம் சரண் புகுவேன்.

சரணங்கள்

1 சத்தியம் பரிசை கேடகமாகும்
சர்வ வல்லவர் நிழலில் தங்கிடுவேன்.

2 வேடன் கண்ணிக், கொள்ளைநோய், சங்காரம்
விக்கினம் யாவும் விலக்கித்தற்காப்பார்.

3 வாதை, பொல்லாப்பு, பயங்கரம் அகற்றி,
வாழ் நாளைக் கழிக்கக் கிருபை செய்வார்.

4 நீடித்த நாட்களால் திருப்தியாக்கி
நித்திய ரட்சிப்பைக் கட்டளை யிடுவார்.

5 பிதா, குமாரன், பரிசுத்த ஆவிக்கும்
சதா காலமும் மகிமை உண்டாகும்.

Q6:417 NSD

## 21. (49T) போற்றக் கூடிடுவோம்

### 95-ம் சங்கீதம்

சங்கராபரணம் ஏகதாளம்

பல்லவி

கர்த்தரைக் கெம்பீரமாக நாம் பாடுவோம்,
கன்மலையைப் போற்றக் கூடிடுவோம்.

77306

### அனுபல்லவி

கர்த்தரின் தூய சந்நிதி நாடி
நித்தியனைத் துதியுடன் கொண்டாடி,

### சரணங்கள்

1 தேவாதி தேவன் தேவர்க்கும் ராசன்
தெள்ளமுது தெளிதேன் மாதேவன்,
மூவாதி முதல்வன் மூவுலகாள் வோன்,
மூவுல கனைத்தும் படைத்த நிமலன்.— கர்த்

2 ஆழங்களும் மகா உயரங்களும்
அத்தன் திருக்கையில் உள்ளனவே.
அகன்ற சாகரம் ஆன பெரும் பூமி
ஆயின யாவும் அவர் கரத்தால் நேமி.— கர்த்

3 நம்மைப் படைத்த நல்லாயன் முன்னே
நாம் பணிந்திடுவோம் பண்புடனே,
நம் கர்த்தர் என்றும் நல் மேய்ச்சல் ஈவார்,
நம்பு மடியார்க்கு நாதன் கோன் ஆவார்.— கர்த்

4 கர்த்தரின் சத்தம் காதினுல் கேட்போம்,
கடுஞ் சினமும் கொள்ளா திருப்போம்,
முற் பிதாக்களன்று மூட்டிய கோபம் போல்
முன்னவர்க்குச் சினம் மூட்டாது வாழ்வோம்.— கர்த்

5 சோதனைக் குழியில் வீழ்ந்து மாளாதீர்,
சோதனை செய்யவும் முன் வராதீர்,
பாதகப் பிசாசின் தீதகம் சிக்காதீர்,
நாதனைக் கிட்டியே நலங்கள் பெறுவீர்.— கர்த்

6 ஆண்டவர் நமக்காய் ஆயத்தம் செய்தவோர்
ஆனந்த நிலையிருக்குது பார்,
அண்ணல் பதம்பாடி ஆர்ப்பரிப்பாய்க்கூடி,
அன்பரைத் தேடுவோம், பொன்னகர் நாடுவோம்.— கர்த்

7 தந்தை சுதனுக்கும் ஆவியாம் தேவர்க்கும்
தங்கிட மகிமை எந்நாளுமே.
எந்தையாம் மாதிரியேகர்க்குச் சந்ததம்
இங்கிதம் புகழ் உண்டாகவே. ஆமென்.— கர்த்

## 22. (50T) ஆனந்தமாக ஆர்ப்பரிப்பீரே

### 98-ம் சங்கீதம்

சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

அதிசயங்களைச் செய்யும் ஆண்டவரை
ஆனந்தமாக ஆர்ப்பரிப்பீரே.

அனுபல்லவி

இரக்கம் கிருபை சத்தியம் விளங்க
இஸ்ரவேலரை நினைவு கூர்ந்தார்.— அதி

சரணங்கள்

1 நீதியை ஜாதிகள் முன்பாக நிறுத்தி
நித்திய ரட்சிப்பைப் பிரஸ்தாபப்படுத்திப்
பூமியின் எல்லைகள் நின்புகழ் காணப்
புரிந்தனை நின் அருள் பூரணமாக;— அதி

2 பூரிகை எக்காளம் சுரமண்டலத்தால்
பூரிப்பாய்த் துதிப்பீர் ஆண்டவர் நாமம்,
கீத சத்தத்தாலே கீர்த்தனம்பண்ணிக்
கிருபாகரனைப் போற்றிடுவீரே.— அதி

3 ஆழியும் பூமியும் அதிலுள்ள யாவும்
ஆறுகள் மலைகள் அனைத்துமே பாடும்,
ஜாதிகள் யாவையும் சரிவர நடத்தி
நீதியாய் நியாயம் விசாரிக்க வருவார்.— அதி

4 பரமபிதாவே பரிசுத்த தேவா,
பாரினில் உதித்த தேவ குமாரா,
ஆவியாய் எங்கும் நிறைந்து விளங்கும்
ஆரண திரித்துவா, துதி உமக்கே.— அதி

## 23. (51T) போற்றிப் பாடிக்கொண்டாடுவோம்

### 100-ம் சங்கீதம்

மோகனம் ஆதிதாளம்

பல்லவி

பூமியின் நற்குடிகளே,—கர்த்தரை என்றும்
போற்றிப்பாடிக் கொண்டாடுங்கள்.

**அனுபல்லவி**

ஸ்வாமியின் சந்நிதியில் சந்தோஷ முகத்துடன்
சாஷ்டாங்கம் செய்து மிகச்சேவித்துப் பணியுங்கள்.— பூமி

**சரணங்கள்**

1 கர்த்தரே தெய்வமென்று கண்டுமே கொள்வீர்கள்,
காசினியில் நாமல்ல கடவுளே சிருஷ்டித்தார்.
அற்புத தேவனின் அரிய ஜனங்களாவோம்,
ஆண்டவர் ஆடுகளாய் அவனியில் இருக்கின்றோம்.— பூமி

2 ஆலய வாசல்களில் அரிய துதிகளோடும்,
அவர் பிரகாரங்களில் அதிபுகழ்ச்சிகளோடும்,
சில முடனே வந்து சிறப்புடனே பணிந்து
சீர் பெரும் ஆண்டவரைச்சேர்ந்துமே துதியுங்கள்.— பூமி

3 கர்த்தர் மகாவல்லவர், கர்த்தர் அருட்கிருபை,
காசினியில் தேடினும் காண்பிரோ பெரியது.
தற்பரன் உண்மையோ தலை முறைக்கு முள்ளது,
தலை வணங்கியே பரன் தாள் பணிந்து மகிழ்வீர்.— பூமி

4 ஆதி பிதா தமக்கும் அரிய குமாரனுக்கும்,
அரூபியான தேவனின் ஆவி பரிசுத்தர்க்கும்,
நீதி முறை வழுவா நிமல திரியேகர்க்கும்
நித்திய மகிமையும் புகழுண்டாகவே. ஆமென்.

## 24. (54T)

### 127-ம் சங்கீதம்

நாட்டை — ஆதிதாளம்

1 கர்த்தர் நம் வீட்டினைக் கட்டுதலில்லையேல்
கட்டும் நம் முயற்சிகள் கடிது வீணாகுமே.
கர்த்தர் நம் நகரினைக் காவா திருந்திடில்
காவலர் கடும்பணி கண்விழித்தும் வீணே.

2 காலை கண் விழித்திட வேலையில் தரித்துமே
மாலை மட்டும் தொழில் சிலமுடனே செய்தும்
வருத்தத்தின் அப்பமே வரும் விருதாப்பலன்
கர்த்தர் தம் அன்பருக் கருளுவார் அருந்துயில்.

3 கர்த்தரின் சுதந்திரம் பிள்ளைகளே, தாயின்
கர்ப்பத்தின் கனிகளும் கடவுளின் செயல்களாம்.
வாலிப குமரரும் வலியர் கையம்புகள்
பல வானம்பராத்தூணி பண்புடன் நிறையுமே.

4 பலமுள்ளான் எவனும் பாக்யவான்,
ஒலிமுக வாசலில் வலிமையுடனின்று
பகைவரைக் கண்டுமே பயமெதுமின்றியே
பலபல பேசுவான் பாரினிலே யென்றும்.

## 25. (56T)

### 150-ம் சங்கீதம்

பியாகு — ஏகதாளம்

1 அல்லேலூயா என்றுமே அவருடைய
பரிசுத்த ஆலயத்தில் அவரைத்துதியுங்கள்,
என்றும் அவரைத்துதியுங்கள்.
வல்லமை விளங்கும் வானத்தைப் பார்த்து
வல்லமை நிறைந்த கிரியைக்காக
அல்லேலூயா அல்லேலூயா.

2 மாட்சிமை பொருந்திய மகத்துவத்திற்காய்
எக்காளத் தொனியோடே அவரைத் துதியுங்கள்,
என்றும் அவரைத்துதியுங்கள்.
வீணை சுரமண்டலம் தம்புரு நடனத்தோடும்
யாழோடும் குழலோடும் தாளங்களுடனும்
அல்லேலூயா அல்லேலூயா.

3 பேரோசையுள்ள கைத்தாளங்களோடும்
இங்கித சங்கீதத்தோடும் அவரைத்துதியுங்கள்.
என்றும் அவரைத் துதியுங்கள்.
சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத்துதியுங்கள்,
சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத்துதியுங்கள்.
அல்லேலூயா அல்லேலூயா.

## 26. (26J) தேவனைத் துதிப்போமே

தேசிகத்தோடி — ஆதிதாளம்

பல்லவி

தூயர், தூயர், தூயரெனத் தூதர் தினம் போற்றும்பரி
சுத்தரான தெவனைத் துதிப்போமே.

சரணங்கள்

1 நேயமோ டெங்கள் பவம் போக்கவும்,
நீசரைத் தேவ புத்திரராக்கவும்,
நித்திய குமாரனை இத்தரைக்கீந்தாரே.— தூயர்

2 நீடிய தயை யுடன் நீசரை
நித்தம் பரிபாலிக்கும் நேசரை
நித்தமும் பத்தியாய்த் துத்தியம் செயத்தகும்.— தூயர்

3 அடியார் பிழை பொறுத்தன்புடன்
ஆதரித்தாரே மிக இன்புடன்;
அல்லும் பகலும் நாம் சொல்லுவோம் துத்தியம்.— தூயர்

4 அந்தமும் ஆதியு மின்றியே,
அன்பு பரிசுத்தம் நீதியொன்றியே,
அத்தன் உலகோரை நித்தமும் காக்கிறார்.— தூயர்

ல. வ. கி.

## 27. (197 J) உன் பாதம் புல்லினேன்

ஆனந்தபைரவி ஆதிதாளம்

### பல்லவி

சொல்லிவந்துன் பாதம் புல்லினேன், பரனே, நீயும்
தூரமாகாதாள்வாய், நேசனே.

### அனுபல்லவி

எல்லியும் அல்லியும் நொந்து யான் இரங்கவே கசிந்து
கல்லு மனமும் கரைந்து காதல் கூருமே உகந்து.— சொல்

### சரணங்கள்

1 இரும்பு நெஞ்சமும் குழையாதோ?—ஏழை கூப்பிட்டால்
இறையோனே காதில் நுழையாதோ?
திரும்பி என்துயர் களையாயோ?—உன் திருவடி
சேர்க்க என்றனை அழையாயோ?
அரும்பி விழுங் கண்ணீர் ஆறாய், அலைபுரளும் தன்மை தேறாய்;
விரும்பி நீ வா என்று கூறாய், மெய்யனே நின்னருட் பேறாய்.—
சொல்

2 சந்ததம் உனையே நம்பினேன்,—சத்துருப்பேயின்
சற்பனையால் மனம் வெம்பினேன்.
சொந்தம் நான் உனக்கியம்பினேன்,—நினைக்காணாதே
துக்கமே விடத்ததும்பினேன்.
பந்தமாமெ வையும் மாளப் பற்றெலாமுன் பாதத்தேறச்
சிந்தை உன்னருளே வீறச் சீவன் முத்தி சேர்ந்தே யாறச்.—
சொல்

3 ஆரிடத்தென் குறை சொல்லுவேன்—ஈசா. வேறே
ஆரைத் தஞ்சமாகப் புல்லுவேன்?
சேரிடத் தெவ்விதம் சொல்லுவேன்?—முப்பகை செய்யும்
தீமையை எப்படிச் சொல்லுவேன்?
பாரிடத்து வந்த பாதா, பாக்ய வேதவாக்ய போதா,
சீரனைத் தினுக்கு மேதா, திவ்விய சற்குரு நாதா.— சொல்

## 28. (13J) உன் திருவரம் தருவாயே

சுத்தசாவேரி ஆதிதாளம்

பல்லவி

அருட் பெரும் சோதி, நீ அடியேனை மீட்டே—உன்
திருவரம் தருவாயே.

அனுபல்லவி

மருள் கொண்டு மாய்கிறேன், மானிலந் தன்னிலே
அருள் தந்து காப்பாயே.— அருட்

சரணங்கள்

1 அல்லல் வினை யகற்றும் அரிய குமாரன் நீ,
தொல்லுலகை ரட்சித்த கொல்கதா வீரன் நீ,
செல்வம் அளிக்கும் நல்ல தெய்வ குபேரன் நீ,
புல்லன் எனக்கு வாய்த்த சொல்லரிய பொக்கிஷம் நீ.— அருட்

2 வன் நெஞ்சனை இழுத்த தீன தயாளன் நீ,
புன் செயலை அளிக்கும் இன்சொல் இறைவன் நீ,
மன் பதையை ரட்சித்த மாண்புடை யேசு நீ,
என் மனதுக்குகந்த அன்பின் சொரூபம் நீ.— அருட்

3 இத்தரையோர்க்கு வேண்டும் சுத்த சுவிசேஷம் நீ,
புத்துயிரை அளிக்கும் நித்திய சீவன் நீ,
முத்தி நெறியைக் காட்டும் மூலப் பரப்பொருள் நீ,
பித்தன் எனக்கு வாய்த்த சித்த சிகாமணி நீ.— அருட்

ஈ. த. யே.

## 29. (33T)

சங்கராபரணம் ஏகதாளம்

### விசுவாசப் பிரமாணம்

1 உலகும் வானும் செய்தாளும்
ஒப்பில் சர்வ வல்லவராய்
இலகும் அருளும் தந்தையாம்
எம்பிரான் றனை நம்புகிறேன்.

2 அவர் ஒரு பேரு மைந்தனுமாய்
ஆதி முதல் எங் கர்த்தனுமாய்த்
தவறில் யேசுக் கிறிஸ்துவையும்
சந்ததமே யான் நம்புகிறேன்.

3 பரிசுத்தாவி அருளதனுல்
படி மேல் கன்னி மரியிடமாய்
உருவாய் நரர் அவதாரமாய்
உதித்தார் எனவும் நம்புகிறேன்.

4 பொந்து பிலாத்ததிபதி நாளில்
புகலரு பாடுகளை யேற்று,
உந்தும் சிலுவையிலறையுண்டு
உயிர் விட்டாரென நம்புகிறேன்.

5 இறந்தே அடங்கிப் பாதாளம்
இறங்கி மூன்றும் தினமதிலே
இறந்தோரிடம் நின்றே உயிரோ
டெழுந்தா ரெனவும் நம்புகிறேன்.

6 சந்தத மோட்சம் எழுந்தருளிச்
சர்வ வல்ல பரனை
எந்தை தன் வல பாரிசமே
இருக்கின்றுரென நம்புகிறேன்.

7 உயிருள்ளோரை மரித்தோரை
உத்தம நியாயந்தீர்த்திடவே,
ஜெயமாய்த்திரும்ப வருவாரெனச்
சிந்தையார நம்புகிறேன்.

8 பரிசுத்தாவியை நம்புகிறேன்,
பரிசுத்தமா பொதுச்சபையும்,
பரிசுத்தர்களின் ஐக்கியமும்
பரிவாய் உண்டென நம்புகிறேன்.

9 பாவ மன்னிப்புள தெனவும்,
மரித்தோர் உயிர்த்தெழுவா ரெனவும்,
ஓவா நித்திய ஜீவனுமே
உளதெனவும் யான் நம்புகிறேன்.

ஜ. ச. வே.

## 30. ஆண்டவர் பிரார்த்தனை

*கரகரபிரியை* — *ஆதிதாளம்*

1 பரலோக தந்தாய்! நின்னுமம்—அதி
பரிசுத்தமுறவே, நின் ராஜ்யம்
வரவே, நினது திருவுளச் சித்தமே
பரமதில் போலிங்கும் துலங்கிடவே.

2 அன்னுடம் உணவளித்திடுவாய்;—யாம்
அயலார் செய்பிழை பொறுப்பதுபோல்,
இன்றே எங்கள் பவங்களைப் பொறுத்தே
நன்றருள்வாய் நரபரிபாலா!

3 சோதனையறக் கண்பார்த்திடுவாய்;—வரு,
தீதனைத்திலும் எமைக் காத்திடுவாய்;
நீதா, ராஜ்யம் வல்லப மகிமை
நினக்கே யுரிய எக்காலமுமே!

26:417
N50

# கீர்த்தனைகளின் முதலடி அகராதி

அதிசயங்களைச் செய்யும் .. .. .. 22
அருட் பெருஞ் சோதி .. .. .. .. 28
அல்லேலூயா என்றுமே .. .. .. .. 25
அன்பர்க்கருள் புரிவோனே .. .. .. 6
ஆவியாம் ஈசனே .. .. .. .. 1
இதோ! அடியேனிருக்கிறேன் .. .. .. 15
உலகும் வானும் செய்தாளும் .. .. .. 29
உன்னதமானவர் சன்னிதி .. .. .. 20
எங்கள் விண்ணப்பம் கேள் .. .. .. 11
என்ன பாக்கியம் அம்மா .. .. .. .. 16
ஏசுநாதனே—இரங்கும் .. .. .. 10
ஏசையா, பிளவுண்ட மலையே, .. .. .. 13
கர்த்தர் நம் வீட்டினை .. .. .. .. 24
கர்த்தரைக் கெம்பீரமாக .. .. .. .. 21
கர்த்தரைப் போற்றிப் புகழுங்கள் .. .. .. 18
கொலைக்காவனம் போரூர் .. .. .. 5
சாலே மாநகர் .. .. .. .. 4
சுதன் பிறந்தார் .. .. .. .. 2
சேவித்துக் கொண்டேன் .. .. .. 14
சொல்லிவந்துன் பாதம் புல்லினேன் .. .. .. 27
தூயர், தூயர், தூயரென .. .. .. .. 26
தோத்திரிக்கிறேன் நான் தோத்திரிக்கிறேனே .. .. 7
பரம சேனை கொண்டாடினர் .. .. .. 3
பரலோக தந்தாய் .. .. .. .. 30
பரனே பரம் பரனே .. .. .. .. 9
பின்செல்வேன், என் மீட்பரே .. .. .. 12
பூமியின் நற்குடிகளே .. .. .. .. 23
வாரும், தேற்றரவரே, வாரும் .. .. .. 8
வானமும் புவியும் .. .. .. .. 19
விடியல் நேரத்தின் வெள்ளி .. .. 17

77306

7A
5-27

As 4